இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2018/2019 இறுதிப்பரீட்சை

ESP 2204 / STP8504

கல்வித் தொழில்நுட்பம்

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி I இன் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். பகுதி II இன் (9-12) எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி III இன் (13-16) எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லாமாக 12 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். விடைத்தாளின் வலதுபக்க மூலையில் நீங்கள் தெரிவு செய்த விசேட கற்பித்தல் முறையின் பாடத்தை தெளிவாக எழுதவும்.

காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி : 26.01.2020 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

## பகுதி I

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

01. ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் துணையுடன் "கல்வித் தொழில்நுட்பம்" என்னும் பதத்தினை விளக்குக.

02. பொது நோக்கங்கள் மற்றும் விசேடக் குறிக்கோள்கள் என்பவற்றை வேறுபடுத்தி, விசேடக் குறிக்கோள்களை எழுதும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு (04) நிபந்தனைகளை குறிப்பிடுக.

03. "பல்லூடகம்" எனும் பதத்தினை விளக்குவதோடு ஆசிரியர் ஒருவர் தனது கற்பித்தலில் பல்லூடகத்தை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று (03) காரணிகளை குறிப்பிடுக.

04. கற்பித்தலில் போலச் செய்தல் உபாயம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்கி போலச் செய்தலை செயலூக்கமிக்க வகையில் பயன்படுத்தக் கூடிய இரண்டு கற்பித்தல் - கற்றல் நிலைமைகளை குறிப்பிடுக.

05. புதிய தொழில்நுட்பத்தினை கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் இணைத்துக் கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஐந்து (05) காரணிகளை குறிப்பிடுக.

06. கற்பித்தல் முறைமை என்றால் என்ன என சுருக்கமாக விளக்குவதோடு பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் மூன்று (03) கற்பித்தல் முறைமைகளின் பெயர்களை குறிப்பிடுக.

07. "டேல் என்பவரின் அனுபவக் கூம்பில்" முன்வைக்கப்பட்டுள்ள தூல எண்ணக்கருவுக்கு இரண்டு (02) உதாரணங்களும் மற்றும் கருத்துநிலை எண்ணக்கருவுக்கு இரண்டு (02) உதாரணங்களும் தருக.

08. அனுகூலமான அல்லது உகந்த கற்றல் நிபந்தனைகளை உருவாக்குவதற்கு S.P.A.C.E மாதிரி பயனுள்ளதாக அமையும். இந்த மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள அனுகூலமான கற்றல் நிபந்தனைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

(பகுதி I இற்கான மொத்தப்புள்ளிகள் 8 x 5 = 40)

## பகுதி II

பகுதி II இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

09. "ஆசிரியரது வகிபாகம் அறிவைக் கடத்துபவர் என்பதிலிருந்து கற்றலுக்கு வசதி செய்பவராக மாற்றமடைந்துள்ளது".

I. "அறிவைக் கடத்துபவர்" எனும் வகையில் ஆசிரியர் வகிபாகத்தின் நான்கு (04) பண்புகளை குறிப்பிட்டு, அப்பண்புகள் ஆசிரியர் ஒருவரது வகிபாகம் கற்றலுக்கு வசதி செய்பவர் என மாற்றமடையும் போது எவ்வாறு மாற்றமடைகின்றது என விளக்குக.

(04 புள்ளிகள்)

II. மாணவர்களின் கற்றலில் மாணவர் மைய அணுகுமுறையை பின்பற்றும் ஆசிரியர் ஒருவர் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டிய நம்பிக்கைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

(05 புள்ளிகள)

III. பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பதனூடாக அத்தகைய நம்பிக்கைகளின் முக்கியத்துவத்தினை பகுப்பாய்வு செய்க.

(06 புள்ளிகள்)

10. "நவீன உலகின் கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஒரு பிரதான பங்கினை வகிக்கின்றது".

I. கற்பித்தல் - கற்றல் செயன்முறையினை மிகவும் பயனுறுதியுள்ளதாக்குவதில் இணையம் பயனுள்ளதாக அமையும் என்பதற்கான நான்கு (04) பண்புகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

II. மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தும் போது எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மூன்றினை (03) குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

III. கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் புதிய தொழில்நுட்பத்தினை ஒன்றிணைக்கும் போது இடையூராக அமையும் நான்கு (04) காரணிகளை உதாரணங்களுடன் விளக்கி அவற்றை இழிவளவாக்குவதற்குப் பொருத்தமான தீர்வுகளைத் தருக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

11. கற்பித்தல் - கற்றல் சாதனங்கள் விளைதிறன்மிக்க கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் மிகவும் பயனுள்ளதாக அமையும்

I. கற்பித்தல் - கற்றல் சாதனங்களை தெரிவு செய்யும் போதும் (குறைந்தபட்சம் 04 அம்சங்கள்) தயாரிக்கும் போதும் (குறைந்தபட்சம் 04 அம்சங்கள்) கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

II. கற்பித்தல் - கற்றல் சாதனங்கள் ஐந்தினை (05) குறிப்பிட்டு (பாடநூல் தவிர்ந்த) அவை ஒவ்வொன்றினதும் குறிப்பான அனுகூலங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

III. வகுப்பறைக் கற்பித்தல் - கற்றல் செயன்முறையின்போது பாடநூல்களை எவ்வாறு பயனுறுதியுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

12. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்று விடயங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

I. கற்பித்தல் நுட்பங்களில் ஒன்றாக களச்சுற்றுலாவின் முக்கியத்துவம்.

II. வகுப்பறைக் கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் மாணவர் மைய அணுகு முறையைப் பயன்படுத்தும் போது ஆசிரியர்கள் முகங்கொடுக்க வேண்டிய சவால்கள்.

III. இலங்கைப் பாடசாலை முறைமையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட (ICT based) "கம்பீரமான வகுப்பறைகளின் - Smart Classroom" அறிமுகம்.

IV. கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் புளூமின் கல்வி இலக்குகளின் பகுப்பியலின் முக்கியத்துவம்.

(5 x 3 = 15 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பகுதி III

பகுதி III இன் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

13. வெற்றிகரமான பாடம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கு ஆசிரியரினுடைய முன்னாயத்தம் மிகவும் முக்கியமானது.

I. ஆசிரியரின் முன்னாயத்தத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் ஆறினை (06) குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. ஆசிரியர் ஒருவர் பாடம் ஒன்றனை திட்டமிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய ஆறு (06) காரணிகளை குறிப்பிட்டு, அவற்றில் மூன்றினை (03) நீங்கள் கற்பிக்கும் பாடத்திலிருந்து பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

III. நீங்கள் மேலே முன்வைத்த மூன்று (03) உதாரணங்கள் தொடர்பாக எதிர்பார்க்கும் சவால்களை விவரித்து அச்சவால்களை எவ்வாறு இழிவளவாக்குவீர்கள் என விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

14. உங்களுடைய மாணவர்களுக்காக பொருத்தமான கற்றல் அனுபவங்களை வடிவமைத்தல் மிகவும் முக்கியமானது.

I. நீங்கள் கற்பிக்கும் பாடமொன்றில் இருந்து பாடத்தலைப்பொன்றினை தெரிவுசெய்து பொருத்தமான நடத்தைசார் நோக்கங்களை எழுதுக. (பாடம், வகுப்பு, பாடத்தலைப்பு என்பவற்றை குறிப்பிடுக).

(04 புள்ளிகள்)

II. நீங்கள் எழுதிய நடத்தைசார் நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்குப் பொருத்தமான கற்றல் அனுபவமொன்றினை விபரிக்குக. (சகல நோக்கங்களுடனும் கற்றல் செயற்பாடுகள் தொடர்புப்படல் வேண்டும்)

(05 புள்ளிகள்)

III. மேலே குறிப்பிட்ட நடத்தைசார் நோக்கங்களுக்குப் பொருத்தமான மீளவலியுறுத்தல் வினாக்களையும் மதிப்பீட்டு வினாக்களையும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

15. பிரச்சினைத் தீர்த்தல் ஒரு விளைதிறன்மிக்க மாணவர் மையக் கற்பித்தல் முறையாகும்.

I. "பிரச்சினைத் தீர்த்தல் முறை" என்பதனால் கருதப்படுவது யாது என சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

II. நீங்கள் கற்பிக்கும் பாடத்திலிருந்து பொருத்தமான உதாரணங்களை பயன்படுத்தி "விதிவரு முறை மற்றும் விதிவிலக்கு முறை என்பவற்றை விளக்குக.

(04 புள்ளிகள்)

III. பிரச்சினைத் தீர்த்தல் முறையினை பயன்படுத்தி அடைந்துக் கொள்ளக்கூடிய நோக்கம் ஒன்றினை குறிப்பிடுக. (வகுப்பு, பாடத்தலைப்பு என்பவற்றைக் குறிப்பிடுக).

நீங்கள் குறிப்பிட்ட விசேடக் குறிக்கோளினை செயலூக்கமுள்ளதாக பிரச்சினைத் தீர்த்தல் முறையினைப் பயன்படுத்தி எவ்வாறு அடைந்துக் கொள்ள முடியும் என நீங்கள் கற்பிக்கும் பாடத்தில் இருந்து உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

16. தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தில் மாணவர் மையக் கற்றலை முன்னேற்றுவதற்கு செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

I. "தேர்ச்சி மையக் கலைத்திட்டம்" என்பதனால் கருதப்படுவது யாது.

(03 புள்ளிகள்)

II. தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் அடிப்படைப் பண்புகள் நான்கினை (04) நீங்கள் கற்பிக்கும் பாடத்திலிருந்து பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

III. நீங்கள் கற்பிக்கும் பாடத்திலிருந்து குறைந்தபட்சம் இரண்டு (02) உதாரணங்களையேனும் குறிப்பிட்டு, மாணவர்களிடத்தில் ஆளிடைத் தொடர்புசார் திறன்களை மாணவர் மையக் கற்றலை நடைமுறைப்படுத்தும் போது எவ்வாறு விருத்தி செய்வீர்கள் என விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)